# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் – 26

# வேதாகமத்தின் மூன்று வகையான பிரித்தெடுத்தல்



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## வேதாகமத்தின் மூன்று வகையான பிரித்தெடுத்தல்




கிறிஸ்து இயேசுவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள மூன்று அறுவடைகளைக் குறித்து தியானிக்கலாம்.

**மத்தேயு 13: 39**

'அறுப்பு உலகத்தின் முடிவு.." (அறுப்பு யுகத்தின் முடிவு NIV Bible)

'யுகம் அல்லது உலகத்தின் முடிவில்" அறுவடை இருப்பதை இவ்வசனம் உறுதிப்படுத்துகிறது. அதோடு மனிதனுக்கான தேவனுடைய தெய்வீகதிட்டத்தில் யுகம் அல்லது உலகம் என்பது ஒரு காலப்பகுதியாகும்.

பொதுவாக அறுவடை என்று எதைக் கூறுகிறோம்? விவசாயத்தில் நிலத்தை உழுது, பயிரிட்டு, பயிர் முதிர்ச்சியடைந்தபின், முடிவில் பலனை அறுவடை செய்தலே ஆகும். ஆனால் இவ்வசனம் விவசாயத்தைக் குறித்து பேசவில்லை என்று அறிவோம்.

ஆகவே சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து(**2தீமோத்தேயு 2:15** ), இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அடையாள பாஷைக்கு பொருள் காணுவோம். பொருளை புரிந்துகொள்வதற்கு முன்பாக, அந்த அடையாளத்திலிருந்து சிலவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அறுவடை என்பது - நிலத்திலிருந்து பலனை எதிர்பார்க்கிற காலம், இதுவே இறுதியான வேலை

ஆனால் அறுவடைக்கு முன்பு செய்ய வேண்டிய வேலைகள்-

- **பயிரிடுவதற்கு நிலம் தேவை**
- **நிலம் உழுது பண்படுத்தப்படவேண்டும்**
- **அடுத்து விதை விதைப்பு**



- பயிர் வளருவதற்கான காலம்
- பயிருக்குத் தேவையான தண்ணீர் மற்றும் சூரிய ஒளி
- சிலநாட்கள் கழித்து,விளைநிலத்திலிருந்து பலன் சேகரிக்கப்படும் அறுவடை
- அடுத்த விதைப்புக்கு நிலம் சுத்திகரிக்கப்படுகிறது

விவசாயத்தில் காணப்படும் இந்த அம்சங்கள், தேவனுடைய தெய்வீக திட்டத்தில் பல்வேறு காலகட்டங்களில் நிறைவேறும் பணிகளை அடையாளப்படுத்துகிறது. இதனை பின்வரும் வசனத்தின்மூலம் அறியலாம் -

**மத்தேயு 13:38** '..நிலம் உலகம்.."

தேவனுடைய விளைநிலமாக இப்பூமி இருக்கிறது. ஆனாலும் விவசாயிகள் தங்கள் விளை நிலம் முழுவதிலும் ஒரே சமயத்தில் பயிரிடுவதில்லை.

சிலர் - ஒருவித பயிரை ஒரு பகுதியிலும், மற்ற பயிர்களை வேறு பகுதிகளிலும் பயிரிடுவர்

வேறுசிலர் - விளை நிலத்தில் சிறு பகுதியை பயிரிட்டு, மற்றவற்றை பயிராமல் விட்டுவிடுவர்.

இவையனைத்தும் அந்த விவசாயினுடைய விருப்பத்திற்கேற்றவாறு இருக்கும்.

அவ்வாறே தேவன் அவருடைய தெய்வீகத் திட்டத்தில், 'யுகங்கள் அல்லது உலகங்கள்" என்றழைக்கப்படும் வெவ்வேறு காலப்பகுதிகளில் சில குறிப்பிட்ட வேலைகளை செயல்படுத்துகிறார்.

தேவன் செய்கின்ற வேலைகளை அறுவடை திட்டத்தின்மூலம் புரிந்துகொள்ளலாம். வேதாகமத்தில் மூன்று அறுவடைகள் உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை

**1. யூத யுக அறுவடை** -

இதில் கோதுமை, பதர் என்ற அடையாளங்களும்...

**2.சுவிசேஷ யுக அறுவடை** -

இதில் கோதுமை மற்றும் களைகள் என்ற அடையாளங்களும்

**3. ஆயிர வருட யுக அறுவடை** -

இதில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு எனும் அடையாளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது இந்த அறுவடைகள்ஒவ்வொன்றையும் தனித்தனியாகஆராயலாம் :-

## 1.யூத யுக அறுவடை

இக்காலத்திற்குரிய நிலமாக- இஸ்ரயேல் தேசம் இருந்தது. இந்த அறுவடையானது கோதுமையிலிருந்து பதரை பிரித்தெடுக்கும் வேலையாகும். இந்த அறுவடையைக் குறித்து வேத வசனங்களில் காண்போம் :

**மத்தேயு 3:11,12**

'..எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது.அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்"



இங்கு அறுவடையாளராக இயேசு இருந்து, கோதுமை பதரை பிரித்தெடுப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் **பதர்** என்பது விதை இல்லாத கோதுமையின் வெளிப்புறத்தோல் அல்லது உமியைக் குறிக்கும். இது வெளிப்புறத்தில் கோதுமையைப் போலிருந்து, உட்புறத்திலோ பலனற்று காணப்படும். ஆனால் **கோதுமையானது** உள்ளும் புறமும் கோதுமையாகவே இருக்கும்.



யூத தேசத்தில் இந்த இரண்டு அடையாளங்களும் எதை அர்த்தப்படுத்துகிறது?

**உள்ளும் புறமும் கோதுமையாக இருப்பது - உத்தம இஸ்ரயேருக்கு அடையாளமாகும்.**

அப்படிப்பட்ட இஸ்ரயேலருக்கு உதாரணமாக -

**யோவான் 1: 47**

'இயேசு நாத்தான்யேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து - இதோ, கபடற்ற உத்தம இஸ்ரயேலன் என்றார்"

பதர் என்பது வெளிப்புறத்தில் (நியாயப்பிரமாண பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பதில்) மாத்திரம் யூதனாயிருந்து, உள்ளாக (இருதயத்தில்) வெறுமையாயிருந்த யூதர்களைக் குறிக்கிறது. இதில் மிகவும் ஆச்சரியமானது என்னவெனில்,பெரும்பாலான மதத்தலைவர்கள் மற்றும் போதகர்கள் இப்படிப்பட்ட வகுப்பாராக இருந்தார்களென நாம் வாசிக்கிறோம் -

**மத்தேயு 23:13**

'மாயக்காரராகிய வேதபாரகரே- பரிசேயரே - உங்களுக்கு ஐயோ, மனுஷர்



பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்
போடுகிறீர்கள்,
நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை,
பிரவேசிக்கப்போகிறவர்களைப்
பிரவேசிக்கவிடுகிறதுமில்லை”

ஆகவே **‘கோதுமை” மற்றும் ‘பதர்” - இஸ்ரயேலுக்குள் காணப்பட்ட இருவித யூதர்களுக்கு அடையாளம்.**

இயேசுவின் முதலாம் வருகையின்போது, இஸ்ரயேல் தேசமாகிய ‘நிலம்” அறுவடைக்கு தயாராக, **‘முதிர்ந்து”** காணப்பட்டது என வாசிக்கிறோம் -

**யோவான் 4:35,36**

‘அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும்என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத் தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்”

இயேசு யூத யுகத்தில் முடிவுக்கு வந்த தேவனுடைய வேலையைக் குறித்தே பேசினார் என்று நாம் உணர்கிறோம்.அப்படியிருக்க, இந்த விளை நிலத்தில்**‘விதைகளை”விதைத்தது யார்?** பின் வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**யோவான்4:38**

‘நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான்உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்”

இஸ்ரயேலுக்குள் தீர்க்கதரிசன மற்றும் வாக்குத்தத்த வசனங்களை, தீர்க்கதரிசிகளும் , பரிசுத்தமான ஜனங்களுமே விதைத்தனர்.



**‘உழுதல்”** என்பது எதைக்குறிக்கும்? இஸ்ரயேல் தேசம் தேவனுடைய வார்த்தைகளாகிய விதைகளை உள்வாங்கி, எகிப்தில் துவங்கி, வனாந்தரப்பயணத்திலும் கானான் தேசத்திலும் தேவனுடைய தெய்வீக பாதுகாப்பு,வழிநடத்துதல், மீட்பு ஆகிய சூரிய ஒளியை பெற்றனர். அதோடு, அறிவுறுத்தல், எச்சரிக்கை மற்றும் ஊக்கமளிக்கிற தேவ வார்த்தைகளாகிய ‘தண்ணீரை” ஏசாயா முதல் மல்கியா வரையிலானதீர்க்கதரிசிகள்

மூலமாக தொடர்ந்து பெற்றனர்.

இதன்மூலம் ‘அறுவடைக்கான” காலம் வந்தபோது, பிரதானஅறுவடையாளராக இயேசு வந்திருந்து அறுவடையை நிறைவேற்றுவார் என்பதை-

**மத்தேயு 3:12**

‘தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்”



இங்கு **இயேசுவின் கையிலுள்ள தூற்றுக் கூடை-** காற்றின்மூலம் பதரை கோதுமை மணியிலிருந்து பிரிக்க இயேசு போதித்த சத்தியம் ஆகும். கிருபையும் சத்தியமுமாகிய அவருடைய வார்த்தைகளுக்கு செவிசாய்த்து, எல்லாவற்றையும் விட்டு, அவரைப் பின்பற்றின அவருடைய சீஷர்களாகிய உத்தம இஸ்ரயேலரே கோதுமை மணிகள்.

**பதர்** என்பது இஸ்ரயேல் தேசத்தில் இயேசுவின் போதனைகளைபுறக்கணித்து, வெளித்தோற்றத்தில் மாத்திரம் இஸ்ரயேலர் என்று நிரூபித்தவர்களையே குறிக்கும்.



**இந்த அறுவடையில்கோதுமை மற்றும் பதருக்கு சம்பவித்தது என்ன?**

இஸ்ரயேலர் மத்தியில் இருந்த இந்த கோதுமை வகுப்பார், உத்தம இஸ்ரயேலர்களாக பிரிக்கப்பட்டு,முதலில் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பில், இயேசுகிறிஸ்துவின் சபையாகிய

**‘தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்”**

**ரோமர்2:9,10** ‘ முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்..”

இயேசுகிறிஸ்துவின் சபையில் யூதர்களே முதல் அங்கத்தினர்கள். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் யூதர்களே. மேலும் பெந்தெகொஸ்தே நாளில் முதன்முதலாக விசுவாசித்ததும் யூதர்களே(அப்போஸ்தலர்2:41).

மேலும் இவர்களது எண்ணிக்கை ‘ஐயாயிரமாக” உயர்ந்ததை **அப்போஸ்தலர்4:4** ல் வாசிக்கிறோம்.

பின்பு பதர் வகுப்பாருக்கு என்ன சம்பவித்தது?

‘பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்“

வேதத்தில் **'அக்கினி" என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பு**க்கு அடையாளம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு - பாவத்தை அழிக்கிறதும்,மனித இருதயத்தை சுத்திகரிப்பதுமான இரு தன்மைகளை பெற்றுள்ளது( உ.ம் **தானியேல்7:10, ஏசாயா 66:15,16** ). பதராகிய இஸ்ரயேல் தேசத்துக்கு வந்த நியாயத்தீர்ப்பை இயேசு கூறினதை வாசிக்கலாம் -

**மத்தேயு 23:38** உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்"



கிபி 33ல் துவங்கி, இஸ்ரயேலின் மீது மாபெரும் உபத்திரவமாகிய நியாயத்தீர்ப்பு நிறைவேறினது. இது கிபி 70ஆம் வருடம் இஸ்ரயேலர் உலக நாடுகள்முழுவதும் சிதறடிக்கப்பட்டு, தேசம் பாழாக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்ததாக வாசிக்கிறோம் -

**சகரியா 7:14**

'அவர்கள் அறியாத புறஜாதிகளுக்குள்ளே
அவர்களைப் பறக்கடித்தேன், அதினால்
அவர்கள் பின்வைத்துப்போனதேசம் போக்குவரத்தில்லாமல் பாழாய்ப்போயிற்று,
அவர்கள் இன்பமான தேசத்தைப் பாழாய்ப் போகப்பண்ணினார்கள் என்றார்"

இங்கு **'அவியாத அக்கினி"** என்பது இஸ்ரயேல் தப்பமுடியாதபடி, அதன்மேல் நிறைவேறித் தீர்ந்த முடிவில்லாத நியாயத்தீர்ப்புகளைக் குறிக்கும்.

இப்பொழுது 'இரண்டாவது அறுவடையாக" வேதத்தில் கூறப்பட்டுள்ளதைக்காண்போம்.

## 2. சுவிசேஷ யுக அறுவடை



இங்கு நிலம் என்பது உலகமனைத்திலும் உள்ள கிறிஸ்தவ தேசங்களை குறிக்கும். இந்த அறுவடை **'கோதுமை"** மற்றும் **'களைகள்"** மத்தியில் நடக்கும் பிரித்தெடுத்தலாகும் என்பதை கீழ்க்காணும் வசனத்திலிருந்து அறியலாம் -

**மத்தேயு 13:30** 'முதலாவது, களைகளைப் பிடுங்கி,
அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக்
கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில்
சேர்த்து வையுங்கள்"

இங்கு **கோதுமை என்பது உண்மை கிறிஸ்தவர்களாகிய புறஜாதியாரைக் குறிக்கிறது**. இப்படியிருக்க **களைகள் என்பது யாரைக் குறிக்கிறது?** என்று நாம் வாசிக்கலாம்-

**மத்தேயு 13:24-30**

'வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். பரலோக இராஜ்யம்தன்

நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரார் அவனிடத்தில் வந்து - ஆண்டவனே நீர் உனது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன் - சத்துரு அதைச் செய்தான் என்றான்.அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்- வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி - முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள், கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்என்பேன் என்று சொன்னான் என்றார்”

இந்த உவமையில் சுவிசேஷயுகத்தில் கிறிஸ்துவின் சபை, அதன் பிறப்பு மற்றும் வளர்ச்சியின் வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. **இந்த நிலத்தில் இருவிதமான விதைகள் விதைக்கப்பட்டுள்ளதை** கவனிக்கவேண்டும்.

வசனம் 24 - **‘நல்ல விதையானது” ‘கோதுமையை** ” விளைவிக்கிறது

வசனம் 25 - **‘சத்துரு விதைத்த விதையானது” ‘களைகளை”** விளைவிக்கிறது

**இங்கு நல்ல விதைகள் என்பது தேவனுடைய வார்த்தைகளாகிய இராஜ்யத்தின் சுவிசேஷமாகும் (லூக்கா 8:11**). இந்த நல்ல வார்த்தைகளை நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இஸ்ரயேல் ஜனங்களிடத்தில் விதைத்தார். அதன்பின்பு இஸ்ரயேலுக்கு வெளியே சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் பொறுப்பை தன் சீஷர்களுக்கு ஒப்படைத்தார் என்று வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 1: 8**

‘பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்”

இவர்கள் மகாபரிசுத்தமான விசுவாசமாகிய, வேதத்தின் சத்திய போதனைகளை பிரசங்கித்தனர். ஆனால் இந்த அப்போஸ்தலர்கள் நித்திரை அடைந்தபின்பு, முதலாம் நூற்றாண்டில் ஆதிகாலச் சபையில் பிசாசானவன் களைகளை விதைத்தான்(**மத்தேயு 13:39**). இவன் விதைத்த களைகளானது, கள்ளபோதனைகளாகும்.

ஒவ்வொரு உண்மை சத்தியமும் தவறானஉபதேசத்தின்மூலம் தலைகீழாக புரட்டப்பட்டது. இது **1தீமோத்தேயு4:1** ல்தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது -

‘பிற்காலத்திலே மனச்சாட்சியிலே சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர்

வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்"

கள்ள உபதேசங்களாகிய 'அழியாத மனித ஆத்துமா", 'திரித்துவமாக இருக்கிற தேவன்" இன்னும் வேதத்தில் சொல்லப்படாத அநேக கள்ள உபதேசங்களைக் குறித்து முந்தைய வகுப்புக்களில் நாம் அறிந்தோம்.

இவ்வாறு இயேசுவினுடையதும்,தேவனுடைய பரித்தஆவியினாலும் உண்டான சத்திய போதனைகளும், சுவிசேஷமும் மாற்றப்பட்டதை பவுல் அப்போஸ்தலன் தெளிவாக போதித்தார்

**2கொரிந்தியர் 11: 4**

'எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே"

**இப்படியாக, 'உண்மையான இயேசு" மறைக்கப்பட்டு, 'வேறொரு இயேசு" போதிக்கப்பட்டார்".**

இங்கு சொல்லப்பட்டுள்ள 'களைகள்" என்பது,

- **பார்ப்பதற்கு கோதுமைச் செடிகளைப் போலவே தோற்றமளிக்கும் செடிகளாகும். ஆனால் நிஜத்தில்அவை கோதுமை அல்ல.**
- **தாவரவியலில்இதை 'தாடியுள்ள களைப்புல்(Beared Darnel)" என்பார்கள்.**
- **இதனுடைய மணிகள், கோதுமையைப்போன்று பொன் நிறமாக இல்லாமல் கறுப்பு நிறத்தில் இருக்கும்.**
- **கோதுமை மணியைப்போல் கனமாக இல்லாமல் லேசான மணிகளைக்கொண்டிருக்கும்**
- **லேசான மணிகளாக இருப்பதால் இக்களைகள் காற்றை எதிர்த்து செங்குத்தாக நிற்கும்**
- **இந்த களை மணிகளை உண்ணும்போது, விஷமுள்ளதாயிருந்து, வாந்தி வரப்பண்ணும். ஆனால் கோதுமை மணியோ ஜீவனுக்கான ஆகாரமாயிருக்கும்.**

**'கோதுமை மற்றும் களை"** - நிலமாகிய சபையில் உள்ள இருவிதமான கிறிஸ்தவர்கள்

**கோதுமை** - சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டஉண்மைக் கிறிஸ்தவர்கள்

**களைகள்** - வெளிப்புறத் தோற்றத்திலும் பெயரளவிலும்மட்டுமே உள்ள பொய்க்கிறிஸ்தவர்கள் இவர்களைஉற்று கவனித்தால் களைகளில் காணப்பட்ட தன்மைகளை பெற்றிருப்பது வெளிப்படும்

**கருப்பு நிற மணிகள்** - இந்த விதை தேவனுடையதாக பொன் நிறத்தை உடையதாக இராமல், பிசாசினுடையதாக(கருப்புநிறம்), கள்ள உபதேசங்ளைக் குறிக்கும்

**வாந்தி வரப்பண்ணும் விஷத்தன்மையுள்ள மணிகள்** - இந்த பிசாசினுடையபோதனைகளை ஏற்றுக்கொள்ளும்போது, வாந்தி பண்ணுதலாகிய அதாவது போலி போதனைகளை நியாயப்படுத்துவதற்காக பேசப்படும் சலிப்புண்டாக்குகிற வார்த்தைகளைக் குறிக்கும். இவ்விதமான நிலைமையே இன்றைய சபைகளில் உள்ளதை தீர்க்கதரிசனமாக கூறப்பட்டுள்ளதை நாம் வாசிக்கலாம் -

**ஏசாயா28:8**

'போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது. சுத்தமான இடமில்லை"

இந்த இருவிதமான கிறிஸ்தவர்கள் அறுவடைக்காலத்தில் பிரிக்கப்படவேண்டியதைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**மத்தேயு 13:30**

'முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்"

**'அறுப்பவர்கள்"** மூலமாக உண்மைக் கிறிஸ்தவர்கள் பெயர்க்கிறிஸ்தவர்களிலிருந்து பிரிக்கப்படுகிறார்கள். **அறுக்கிறவர்கள் 'தேவதூதர்கள்"** என்று **மத்தேயு 13:39** ல் வாசிக்கிறோம்.

**இங்கு Angels(தேவதூதர்கள்) என்னும் வார்த்தை- Aggelos (ஸ்ட்ராங்ஸ் கிரேக்க வார்த்தை எண்:32) என்பது, ஆவிக்குரிய அல்லது மாம்சதூதுவர்களை பொருளாகக் கொண்டது.**

**இந்த தூதுவர்கள் எடுத்துச்செல்லும் தூது** - தேவனுடைய வார்த்தையாகிய சத்தியமாகும். சுவிசேஷ யுகத்தின் முடிவாகிய தற்காலத்தில், இந்த வேத சத்தியங்கள் புதிய சத்தியங்களாக தோற்றமளித்தாலும், இவை மிகப் பழைமை வாய்ந்த சத்தியங்களேயாகும். இந்த சத்தியங்கள் கருக்குள்ள அரிவாளைப் போன்று கூர்மையானதாகும்.



**களைகளைப் பிடுங்கி, சுட்டெரித்தல்** - பொய்யான அமைப்புகள்மற்றும் கள்ள உபதேசங்களை முற்றிலும் அழிக்கக்கூடிய தேவனுடைய நியாயத்தீர்ப்புகள்

**கோதுமை வகுப்பார் களஞ்சியத்தில் சேர்க்கப்படுதல்** - களஞ்சியம் என்பது முதிர்ச்சியடைந்த கோதுமை வைக்கப்படும் இடமாகும். சத்தியத்தில் உள்ள சகோதரர்களுடன் உண்மையான ஒரே சபையில் கூட்டப்படும் சகோதர

ஐக்கியம் ஆகும்.

**1தீமோத்தேயு 3:15**

‘.. தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்காக எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது”

இந்த சத்தியத்தில் உள்ளசகோதர ஐக்கியமாகிய களஞ்சியத்தில் இருவிதமான குணாதிசயங்களுக்கு முன்னேற்றமடைகின்றனர்.

**குமாரனுடைய சாயலுக்கு பூரணமாக முதிர்ச்சியடைந்தவர்கள்**- சிறுமந்தை(லூக்கா 12:32)

**குறைவுபட்ட முதிர்ச்சியடைந்தவர்கள்** - திரள்கூட்டத்தினர் (வெளிப்படுத்தல் 7:9)

இதுவே பெரிதான இரட்சிப்பு என்று நாம் வாசிக்கிறோம். அடுத்து நாம் மூன்றாவது அறுவடைக்கு செல்வோம்-

## 3. மேசியா யுகத்தின் அறுவடை



இங்கு நிலமானது முழு மனுக்குலத்தையும், இந்த அறுவடை என்பது செம்மறியாடு மற்றும் வெள்ளாடு ஆகியவற்றைப் பிரித்தெடுத்தலையும் அடையாளப்படுத்துகிறது. இந்த அறுவடையைக் குறித்த வசனங்களை வாசிக்கலாம் -

**மத்தேயு 25:31-46**



‘அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது , ராஜா தமதுவலது பக்கத்தில்நிற்பவர்களைப்பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்,

அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக, மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து அவர்- சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன் , நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார். அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக - ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும்,வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலில் அடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்"

இங்கு நியாயத்தீர்ப்பின் நாளாகிய ஆயிரமாண்டில் நடைபெறும் மூன்றாவது அறுவடையை இயேசு உவமையாகப் பேசியிருக்கிறார்.

இங்கு **'செம்மறியாடு" மற்றும் 'வெள்ளாடு" ஆகிய இரண்டு அடையாளங்கள் இரண்டு வகுப்பாரைக் குறிக்கும்**

முழு மனுக்குலத்திற்கும் 'புரிந்துகொள்ளக்கூடிய கண்களையும் காதுகளையும் திறக்கும் அந்நாளில்,

**செம்மறியாடு வகுப்பார் - தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கீழ்ப்படிதலும் தாழ்மையும் உள்ளவர்களாக மாறுவதையும்,**

**வெள்ளாடு வகுப்பார் - தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றிருந்தும், மனந்திரும்ப மறுத்து, மனக்கடினமுள்ளவர்களாகி, துணிகரமாக கீழ்ப்படியாமைக்குள் செல்லும் மனிதர்கள்**என்று வாசிக்கிறோம் -

**ஏசாயா 26:10**

'துன்மார்க்கனுக்கு தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்.
நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து
கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்"

இவ்வுலகத்திற்கான இந்த நியாயத்தீர்ப்பின் காலத்தைக் குறித்து பின்வரும் வசனம்கூறுகிறது

**அப்போஸ்தலர் 17:31**

'மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த
மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்"

இந்த **நியாயத்தீர்ப்பின் நாளானது**, முழு மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவரையும் - **'ஜீவன்பெற தகுதியுள்ளவர்" அல்லது 'தகுதியற்றவர்** " என்று தீர்க்கும்.

**ஜீவன்பெற தகுதியுள்ளவர் - செம்மறி ஆடு, ஜீவன் பெற தகுதியற்றவர்- வெள்ளாடு**

இந்த நியாயத்தீர்ப்பின் வேலையைக் குறித்து கீழ்க்காணும் வசனம் கூறுவதைக் காணலாம் -

**வெளிப்படுத்தல் 22:12**

'மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக
நிற்கக்கண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும்
வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில்
எழுதப்பட்டவைகளின்படியே தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக
நியாயத்தீர்ப்படைந்தார்கள்"

இங்கு **'புஸ்தகங்கள்'** என்பது - கர்த்தருடைய புத்தகமாகிய வேதாகமத்தின் 66 புத்தகங்களைக் குறிக்கும்

**'திறக்கப்பட்டது"** - வேதம் பழக்கத்தில் இல்லாத பாஷைகளிலும், கருகலான பாஷைகளிலும் பூட்டப்பட்டிருந்த நிலை மாற்றப்பட்டு, மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றி, வேதத்தில் உள்ள சத்தியங்களை புரிந்துகொள்ளும் மனக்கண்கள் திறக்கப்படுவதைக் குறிக்கிறது.

**'ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது"** - நியாயத்தீர்ப்பின் நாளில் ஒவ்வொருவருடைய ஜீவனுக்கேதுவான கிரியைகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதைக் குறிக்கும்.

**'அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்"** - தேவனுடைய வார்த்தைகளில் உள்ள சத்தியத்தை அறிந்த பின்பு, ஜனங்கள் அவர்களுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படுவதைக் காண்பிக்கிறது. இங்கு **'கிரியைகள்"** என்பது எதைக் குறிக்கிறது?

கீழ் வரும் வசனங்களில் காணலாம் -

**மத்தேயு 25:35-39**

‘பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக, ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்”

இங்கு கிரியைகள் என்பது நேரடியான அர்த்தத்தை குறிக்காது. இது உவமை பாஷையில் பேசப்பட்டுள்ளது. ஆகவே,

**பசியாயிருந்தேன்.. தாகமாயிருந்தேன்** - தேவனுடைய இராஜ்யத்திலும் நியாயத்தீர்ப்பின் நாளிலும் சரீரத்துக்கடுத்த ஆகாரத்துக்கும் தண்ணீருக்கும் குறைவு இருக்காது. ஆகவே **‘தாகம் “, ‘பசி ”** என்பவை **ஆவிக்குரிய ஆகாரம் மற்றும் ஆவிக்குரிய தண்ணீராகிய தேவனுடைய வார்த்தைகளை** அடையாளப்படுத்துவதை வசனம் உறுதிப்படுத்துகிறது -

**எரேமியா 15:16**

‘உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது”

**வெளிப்படுத்தல் 22:17**

‘..விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்”

தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளை ‘கேட்கக்கூடிய” ஒருவர், அந்த சத்தியத்தை மற்றவர்களுக்கும் எடுத்து செல்லக்கூடிய வாய்ப்புக்குள்ளாக அழைக்கப்படுகிறார். இவர்களது கிரியைக் குறித்து நாம் வாசிக்கிறோம் -

**வசனம் 35 “அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்”** - மனுக்குலத்தில் உள்ள செம்மறியாடு வகுப்பார் - தங்களுடைய உறவினர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு மட்டும் ஊழியம் செய்வதோடு நில்லாமல், அதற்கும் மேலாக, தாங்கள் அறிந்திராத அந்நியர்களுக்கும் ஊழியம்செய்வார்கள். இவர்களது உள்ளமானது எல்லோரையும் நேசிக்கும் பரந்த உள்ளமாக இருக்கும்.

**வசனம் 36 'வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்" -** இது நேரடியான அர்த்தம்அல்ல. ஏனெனில் தேவனுடைய இராஜ்யத்தில் ஆடையின்றி நிர்வாணிகளாக இருக்கும் சூழ்நிலை இருக்காது. இங்கு நிர்வாணம் என்பது இயேசு கொடுத்த ஈடுபலியின் விலைக்கிரயத்தால் பாவங்கள் மூடப்படாத நிலையில் இருக்கும் உலகத்தில் உள்ள பாவிகளின் நிலையைக் குறிக்கும்.
இந்துக்கள், இஸ்லாமியர், கடவுள் நம்பிக்கையற்றவர் போன்றோருக்கு பாவங்களை மூடுவதற்கான 'ஒரே நீதியின் வஸ்திரத்தை" பற்றி கூறவும், தேவநீதிக்குள் கொண்டுவரவும் வாய்ப்பு அங்கு உண்டாயிருக்கும்.

**'வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்கவந்தீர்கள்.."** - இங்கும் சொல்லர்த்தமான உடல் வியாதியை குறிப்பிடவில்லை. ஏனெனில் தேவராஜ்யத்தில் வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்லுவதில்லை(**ஏசாயா33:24** ). மாறாக, கல்லறையிலிருந்து விழித்தெழுபவர்களின் 'பாவநிலையை" - பாவத்தால் வியாதிப்பட்டிருப்பதை குறிக்கும். இவர்களை விசாரித்து, பாவ வழிகளிலிருந்து விடுவிக்க, ஆலோசனையும் ஊக்கமும் கொடுத்து பாவத்திலிருந்து விடுபட செய்பவர்களே 'விசாரிக்க வந்தவர்கள்". இப்படிப்பட்ட விசாரிக்கும் வாய்ப்புகள் அப்பொழுது அதிகமாக இருக்கும்.

**'காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்"** - இது மாபெரும் காவற்கூடமாகிய கல்லறையை குறிக்கும். இந்தப் பிரேதக்குழிகளில் உள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு விழித்தெழுந்து வருவார்கள்(**யோவான்5:28,29** ). எப்படி உயிர்த்தெழுந்து வருவார்கள்? அநேகருடைய ஜெபத்திற்கு விடையாகவே எழுந்து வருவார்கள்.

**'..என்னைப் பார்க்க வந்தீர்கள்"** -ஆனால் அநேகர் தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காக ஜெபிப்பதற்கு உறவினர்களோ, குடும்பத்தினரோ இல்லாமல் மரித்துள்ளதை நாம் அறிவோம். உதாரணமாக அநாதைகள்,வீதியோர ஜனங்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், வழிப்போக்கர்கள்...இப்படிப்பட்டவர்களது உயிர்த்தெழுதலுக்காக ஜெபித்து, அவர்களுக்கு ஊழியம் செய்யும் 'செம்மறியாடு" வகுப்பார் அநேகர் அங்கு இருப்பார்கள். இப்படிப்பட்ட கிரியைகள், இராஜ்யத்தில் சகமனிதர்களுக்கு செய்யப்படும் அன்பின் கிரியைகளாகும்.

இவ்வாறு 'செம்மறியாடு வகுப்பார்", தங்களால் இயன்ற எல்லா வழிகளிலும், மனிதர்களுக்கு ஊழியம் செய்வதால், இராஜாவின் வலதுபக்கமாக சேர்க்கப்படுவார்கள். ஆனால் 'வெள்ளாடு" வகுப்பார் இராஜாவின் 'இடதுபக்கமாக" அநீதி மற்றும் தயவற்ற ஸ்தானத்திற்கு சேர்க்கப்படுவார்கள்( **ஏசாயா 26:10** ).

இது 1000 வருடம் முழுவதும்தொடர்ந்து நிறைவேறும் திட்டமாக இருக்கும்.

எல்லோரும் மனந்திரும்பி, சீர்பொருந்துவதற்காக தேவனிடத்திலிருந்து வாய்ப்பை பெறுவர் என்பதை வசனம் கூறுகிறது -

**ஏசாயா 65:20**

'அங்கே இனி அற்ப ஆயுசுள்ளபாலகனும்,தன்நாட்கள் பூரணமாகாத கிழவனும்

உண்டாயிரார்கள். நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான். நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்”

இது அதிகபட்ச பயிற்சிக்காலமாக நூறு வருடம் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படும். துணிகரமாக பாவம் செய்வோர் இந்த நூறு வருடத்தைக் கடக்கமாட்டார்கள். ஆனால் தேவனிடமிருந்து வரும் சாபமாகிய மரணத்தை - இரண்டாம் மரணத்தை அடைவார்கள்**(ரோமர் 6:23).**

இறுதியில், செம்மறியாடு வகுப்பார் இந்த பூமியில்தேவனுடைய இராஜ்யத்தையும், அதில் நித்திய ஜீவனையும் சுதந்தரிப்பா்**(சங்கீதம் 37:29)**

**‘வெள்ளாடு** ” வகுப்பினர், நித்திய ஆக்கினையை அடைவார்கள். ஆனால் இந்த மூன்றாவது அறுவடையில்உள்ள வித்தியாசம் என்னவெனில், பதர் மற்றும் களைகளுக்கு நேர்ந்ததுபோல் அல்லாமல், இது நித்தியமும் நிரந்தரமுமான அழிவாக இருக்கும். அதன்பின்பு பரிபூரணமான மனித ஜாதி பூரணமான பூமியில் நித்தியமான ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்.

**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/